விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 285 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை (30.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள், பொதிகள் சேவை
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1250/= Australia - 2050/=
France - 1930/= Canada - 2470/=
Germany - 1930/= தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா,
மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி
(5553)

## காற்றாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து
# மன்னாரில் பாரிய ஆர்ப்பாட்டம்




மன்னாரில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மன்னாரில் பொது முடக்கமும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடைபெற்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## படுகாயமடைந்த இளைஞனும் உயிரிழப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## அர்ச்சுனா எம்.பி கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுக் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்

15ஆம் பக்கம் பார்க்க

### விடுதலைப் புலிகளின்
## ஆயுதங்கள், தங்கத்தைத் தேடி மட்டக்களப்பில் அகழ்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள புளியடிமடு காயங்குடாப் பகுதியில் தனியார் காணியொன்றில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தைத் தேடி விசேட அதிரடிப் படையினர் நேற்றுத் திங்கட்கிழமை (29) நீதிமன்ற உத்தரவுக்கமைய அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர்.

கல்லடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் இக்காணி

15ஆம் பக்கம் பார்க்க

## பொய்களால் மக்களை ஏமாற்றுவதில் அரச தரப்பினர் வல்லவர்கள்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்




(கொழும்பு)

பொய்களால் மக்களை ஏமாற்றுவதில் அரச தரப்பினர் வல்லவர்கள் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஜப்பான் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு இஷிபாவை நேற்றுத் திங்கட்கிழமை காலை ஜப்பானியப் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடல்களின்போது ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம்,

15ஆம் பக்கம் பார்க்க

### இலங்கையில் முதல்முறையாக
## 'மெபெட்ரோன்' என்ற போதை கண்டறியப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் முதல் முறையாக "மெபெட்ரோன்" என்ற போதைப்பொருள் கண்டறியப்பட்டுள்ளது.

வெலிகமப் பகுதியில் அண்மையில் 'ஐஸ்' போதைப் பொருள் என்ற சந்தேகத்தில் கைப்பற்றப்பட்டவை 'மெபெட்ரோன்' என்ற போதைப்பொருள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில்
## ஷெல் வெடித்ததில் இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மோட்டார் ஷெல் வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி தட்டுவான் கொட்டியில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாழடைந்த வீடொன்றில் காணப்பட்ட மோட்டார் ஷெல் வெடித்ததிலேயே இந்த

15ஆம் பக்கம் பார்க்க

## 5 மாணவர்கள் கஞ்சாவுடன் கைது

(பதுளை)

பதுளையில் உள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் ஐந்து மாணவர்களை 3,470 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் பசறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலைத் திட்டம் கலந்துரையாடல் அவசியம்
### எக்ஸ் பதிவில் நாமல் எம்.பி

(கொழும்பு)

மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் பொது மக்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார்களுடன் கலந்துரையாடுவது அவசியம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண மகளிருக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள்



வடக்கு மாகாண மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான உதவித் திட்டங்கள் நேற்றுத் திங் கட்கிழமை வழங்கி வைக்கப்பட் டுள்ளன.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்த கோபாலன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு உதவித் திட்டங் களை வழங்கி வைத்தனர்.

அதன்போது தையல் இயந் திரங்கள், நீர் இறைக்கும் மின் மோட்டார்கள், குளிர்சாதனப் பெட்டி கள் தற்காலிக கடைத் தொகுதிகள், கால்நடை வளர்ப்புக்கான உதவி தொகைகள் என வடமாகாணத்தில் தெரிவு செய்யப் பட்ட மகளிர் தொழில் முனை வோருக்கு உத வித் திட்டங்கள் வழங்கி வைக் கப்பட்டன.

(ம-7,33)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு

- துப்பரவுப் பணியாளர்கள்
- பூங்கன்று பராமரிப்பாளர்கள்
- சமையல் உதவியாளர்

தேவை. ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.

தொடர்பு: 077 800 1214

(C-3989)

## இளங்கலைஞர் மன்றம்

சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

### அங்கத்தவர் இணைப்பும் பொதுக்கூட்டமும் - 2025

மேற்படி மன்றத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 09.11.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் கலைஞர்கள், பொதுத்துறை சார்ந்தவர்கள் வருடச் சந்தா, ஆயுள்சந்தாவினைச் செலுத்தி இணைந்து கொள்ளலாம். மேலும் அங்கத்தவராகப் பொதுக் கூட்டம் நடைபெறும் நாளிலும் இணையலாம்.

குறிப்பு:- 1. விண்ணப்பப் படிவங்களை மன்றத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. பழைய அங்கத்தவர்கள் இந்த வருடச் சந்தாவினைச் செலுத்தி இணைந்து கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 5331

செயலாளர்,
இளங்கலைஞர் மன்றம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

(5548) 30.09.2025

## கண்ணீர் அஞ்சலி



யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலய அதிபர் திரு.சி.ரவிச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் சிவஞானம் புகனேஸ்வரி

அவர்கள் 27.09.2025 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்

(1608)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## மரண அறிவித்தல்

அன்னை மடியில
10 - 08 - 1945



அமலன் அடியில்
27 - 09 - 2025

### திருமதி கிருஷ்ணபிள்ளை இராசம்மா (மீனாட்சி)

அல்வாய் தெற்கு, ஓடை, எழுபாவத்தையைப் பிறப்பிடமாகவும் மாலுசந்தி, வங்களாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை இராசம்மா அவர்கள் கடந்த (27.09.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான இராமலிங்கம் (இராமு) - மீனாட்சி தம்பதியின் புதல்வியும் அமரர் சின்னையா - கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்கள் தங்கம்மா, கந்தசாமி, பூரணம், கனகரத்தினம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் தெய்வமலர், மற்றும் கணேசராசா (பிரான்ஸ்), விக்கினராசா (லண்டன்), அமரர் சண்முகராசா (ரவி), மற்றும் சிவானந்தராசா (சாந்தன் - கனடா), மணிமொழி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜா, பாமினி, மஞ்சுளா, யோகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் [illegible]னனி, ஆரணி, துர்க்கா, கிருஷ்ணா, ஆதிஷன், அபிகாஷ், தீபிகா, ஸ்ரியன், சந்துாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2025) காலை 08.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் வதிரி ஆலங்கட்டை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : த.சுந்தரலிங்கம் (பெறாமகன்) : 077 185 7875
யோ. மணிமொழி (மகள் - நோர்வே) : 0047 406 757 95
கி.சிவானந்தராசா (சாந்தன்-கனடா) : 0016 476 421 736

(C-[illegible]8)

## மரண அறிவித்தல்

மலர்வு
16 - 01 - 1960



உதிர்வு
28 - 09 - 2025

### ஜெஸ்லி புளோறிடா (ராசாத்தி)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெஸ்லி புளோறிடா (ராசாத்தி) நேற்றுமுன்தினம் (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராசா - றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்புக்குட்டி - கிறிஸ்ரினா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சத்தியநாதன் அவர்களின் தங்கையும் எட்மன் அவர்களின் அன்பு மனைவியும் கிஷானி (பபா), லின்டா (லண்டன்), லக்ஷி (லண்டன்), ஷாலு (பிரான்ஸ்), ஹரீஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் தீபராஜ், தர்மசீலன் (லண்டன்), தேவகரன் (லண்டன்), சுந்தர் (பிரான்ஸ்), றொக்ஷி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷைரிக்கா, டிசூரிக்கா, மிஷானிக்கா, மக்ஸிக்கா, பியாரிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.09.2025) செவ்வாய்க்கிழமை மாலை 03.00 மணியளவில் சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல் : குடும்பத்தினர்
077 550 1449, 075 523 4294

(5544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# திலதீஸ்வரன் யதுஸ்



**பிறப்பு**
**18.10.2004**

**இறப்பு**
**25.09.2025**

மீசாலை கிழக்கு மீசாலையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திலதீஸ்வரன் யதுஸ் அவர்கள் கடந்த (25.09.2025) வியாழக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் திலதீஸ்வரன் - உமா தம்பதியரின் அன்பு மகனும் யுவனின் பாசமிகு சகோதரனும் அமரர் பசுபதி - இராசம்மா மற்றும் அமரர் சுப்பிரமணியம் - இலட்சுமி ஆகியோரின் பேரனும் சற்குணராசா - கலாராணி, விஜயராஜா - சித்திராராணி, புகழேந்திரன் - அமுதராணி, பிரகாஷ் - வசந்தி ஆகியோரின் மருமகனும் சக்திதாசன் - சுமதியின் பெறாமகனும் மகாதேவன் - ஜெயந்தி, சிறீராம் - ஜயந்தி ஆகியோரின் மருமகனும் ரஜீவ், சாதனா, சப்னா, நிவேதா, நிருகா, நிலக்சன், மிளிர்சன், நீவியன், இனோஸ், கேனிதன், தஸ்விகா, ரேணுஜன், திவியா ஆகியோரின் மைத்துனரும் சஸ்மிலா, சுகாஸ் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் மற்றும் சொந்தங்களின் பாசமிகு உறவினரும் நண்பர்களின் உயிர்த் தோழனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (30.09.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு முற்பகல் 11.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் : குடும்பத்தினர்*
**077 297 3090**

(C-3990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ஆவது தடவையாக ஆசியக்கிண்ணத்தை வென்றது இந்தியா

## பரம எதிரியான பாகிஸ்தான் கையால் வெற்றிக் கிண்ணத்தை வாங்கவும் மறுப்பு

**ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 5 விக்கெட் வித்தியாசத் தில் வீழ்த்தி 9 ஆவது முறையாக ஆசியக் கிண்ண சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.**

ஆசிய கோப்பை இறுதிப்போட்டி டுபாயில் நடைபெற்றது. இதில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதியிருந்தன. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 19.1 ஓவரில் 146 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தொடக்க ஜோடி அதிரடியாக ஆடி ஓட்டங்கள் குவிப்பில் ஈடுபட்டது. ஆனால் அடுத்து வந்த வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. பர்ஹான் 57 ஓட்டங்களிலும், பகர் சமான் 47 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டும், பும்ரா, வருண் சக்கரவர்த்தி, அக்சர் படேல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. சிறப்பாக ஆடி வந்த அபிஷேக் சர்மா 5 ஓட்டங்களிலும் சூர்யகுமார் யாதவ் ஒரு ஓட்டத்திலும், சுப்மன் கில் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 20 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்களை இழந்து இந்தியா தத்தளித்தது.

4ஆவது விக்கெட்டுக்கு திலக் வர்மாவுடன் சஞ்சு சாம்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் ஆடி 57 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சஞ்சு சாம்சன் 24 ஓட்டங்களில் வெளியேறினார்.



அடுத்து இறங்கிய ஷிவம் துபே திலக் வர்மாவுடன் இணைந்து அதிரடியாக ஆடினார். பொறுப்புடன் ஆடிய திலக்வர்மா அரை சதம் கடந்து அசத்தினார்.

இறுதியில், இந்தியா 19.4 ஓவரில் 150 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்று ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

இதனிடையே இந்திய அணி கிண்ணம் இன்றி வெற்றியைக் கொண்டாடியது. இறுதிப் போட்டியில் வெற்றி அணிக்கு கிண்ணத்தை வழங்குவதற்கு ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவர் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் மொக் சின் நஹ்பியுடன் பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்திய அணி அவர்களிடம் இருந்து கிண்ணத்தை பெற்றுக்கொள்ள மறுத்ததாக இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையின் செயலாளர் தேவ ஜித் சைகியா தெரிவித்துள்ளார். (3)

## முல்லைத்தீவில் பிரம்மாண்ட செஸ் போட்டி; நூற்றுக்கானக்கானோர் பங்கேற்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை செஸ் சம்பியன்ஷிப் 2025 சதுரங்கப் போட்டியானது கடந்த சனிக்கிழமை புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் மஜிக்கல் நைற் செஸ் அக்கடமியின் ஏற்பாட்டில் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தது.

இந்த மாபெரும் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்றமை முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாக அமைந்துள்ளது.

சமீப காலங்களில் சதுரங்கத்தில் திடீர் வளர்ச்சி அடைந்துவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில், இப்போட்டியானது முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் நிகழ்வாக இடம்பெற்றிருந்தது.

குறித்த சதுரங்கப் போட்டியில் பாடசாலை மாணவ, மாணவிகள், இளைஞர்கள் , பெற்றோர்கள் என ஆர்வத்துடன் போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பதக்கங்கள், கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்ததுடன் பங்குபற்றிய அனைத்து வீர, வீராங்கனைகளுக்குமான சான்றிதழ்களும் மஜிக்கல் நைற் செஸ் அக்கடமியினால் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. (3-299)

## ஜொலிஸ்ரார் கிண்ணத் தொடர்

# யாழ்.ஜொனியன்ஸ் அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்கான 2 ஆவது தகுதிச் சுற்றுத். தொடர் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி தகுதிச் சுற்றுக்கான போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ஸ் அணி மோதியிருந்தது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். ஜொனியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 30 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் செறோபன் 130 ஓட்டங்களையும், தனுஜன் 35 ஓட்டங்களையும், கிஷாந்துஜன் 27 ஓட்டங்களையும் சஞ்சயன் · ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் மற்றும் அபிதாஷ் 19 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணியைச் சேர்ந்த மதுஷன், நர்த்தனன், நிரோஷன், கஜேந்திரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர்.


265 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 24.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் கஜேந்திரன் 33 ஓட்டங்களையும் நர்த்தனன் 23 ஓட்டங்களையும் மதுர்ஷன் 23 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் யாழ். ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த அபிநாஷ் 4 விக்கெட்டுக்களையும் சஞ்சயன் 2 விக்கெட்க்களையும் கவிஷன், செறோபன், சௌமியன், கிஷாந்துஜன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இப்போட்டியின் மூலம் யாழ். ஜொனியன்ஸ் அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிதி அறிவியல் மாத நிகழ்வு மற்றும் நிதியறிவுக் கண்காட்சி கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள அதன் அலுவலகத்தில் பிராந்திய முகாமையாளர் பகீரதி செந்தில்மாறன் தலைமையில் நடைபெற்றது.



பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய சமையலறைக்கூடம் கடந்த 25ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. **(படம் - மகாலிங்கம்)**



சிறுவர் தினத்தை முன்னிட்டு போரின் போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் நினைவாக "எழுகை" அமையத்தின் ஒழுங்கு படுத்தலில் மாபெரும் குருதிக்கொடை முகாம் கிளிநொச்சி பசுமை பூங்காவனத்தில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது.

**(படம் - தேவானந்தன்)**




வவுனியா. ஈச்சங்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸாருக்கான உணவகம் என்பன வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால அவர்களால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

**(படம் - வசந்தரூபன்)**




யா/ ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி பாடசாலை முதல்வர் செ.பகீதரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. **(படம் - சிவசாந்தன்)**



யா/ மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் திண்மக் கழிவகற்றல் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திண்மக் கழிவகற்றல் தொகுதியை திறந்து வைப்பதற்கு எழுக மூளாய் மறுமலர்ச்சி மன்றம் நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. **(படம் - கஜிந்தன்)**



"வளமான நாடும் அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளில் "மறுமலர்ச்சி நகரம்" உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்களினால் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

**(படம் - ஜோசப்நயன்)**




கல்வி ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் வடமாகாண கிளிநொச்சி காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்காக ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு கடந்த 25ஆம் திகதி கிளிநொச்சி காரியாலய அலுவலகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவிலிலுள்ள பொருளாதார மத்திய நிலையம் இன்று மீள ஆரம்பம்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம் மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணிக்கு மீள் அங்குரார்ப்பண நிகழ்வு நடை பெறவுள்ளது.**



இந்நிகழ்வில் , கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் , வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க, வர்த்தக வாணிப பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜெயவர்த்தன, கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது.

விவசாயிகள் தமது அறுவடைகளுக்குத்தகுந்த விலையை பெற்றுக்கொள்வதற்கும் நுகர்வோர் மலிவு விலையில் மரக்கறி மற்றும் பழ வகைகளை கொள்வனவு செய்வதற்கும் வசதியாக இந்த விசேட பொருளாதார மத்திய நிலையம் நிர் மாணிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கு அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது எனவும் அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

திறந்து வைக்கப்பட்ட மறுநாளே பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டது. அதன் பின்னர் கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைப் பெற்றுக்கொண்ட வியாபாரிகள் , கடைக்கான முற்பணத்தை வழங்கிய போதும் இதுவரை வியாபார நடவடிக்கை நடைபெறவில்லை. அந்தப் பகுதியைப் பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டு தரவேண்டும். விவசாயிகளுக்கும் தென் பகுதி வியாபாரிகளும் இதைநோக்கி வருவதற்கு ஏதுவான ஏற்பாடுகளை மேற்கொண்டு தர வேண்டும். அதற்காக தமக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும் எனகோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில் புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலத்தின் பின் குறித்த பொருளாதார மத்திய நிலையம் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மீள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படவுள்ளது. (8-33)

## சங்கத்தானை உறவுகளின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல்





(சாவகச்சேரி)

கடந்த 1993 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி இலங்கை விமானப் படைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த 20 உறவுகளினுடைய 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானையில் உள்ள நினைவாலயத்தில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள்,அயலவர்கள்,கிராம மக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (8-30)

## "உங்கள் பேராசைக்காக யானைகளை கொல்லாதீர்கள்"

### யாழில் கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யானைகள் , மனிதர்களிடையே முரணற்ற வாழ்வை வலியுறுத்தும் கையெழுத்துப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை காட்டு யானைகள் பாதுகாப்பு சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகர் பகுதியில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

"உங்கள் பேராசைக்காக யானைகளைக் கொல்லாதீர்கள்" எனும் தொனிப் பொருளில் ஆரம்பமான கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. (8-33)



## கரியபுலத்தில் "மானம்பூ" திருவிழா


(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் 11 தினங்களும் மாலை 3 மணிக்கு நவராத்திரி வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 02.10.2025 வியாழக்கிழமை "விஜய தசமி" மானம்பூ உற்சவம் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் 4 மணியளவில் "வன்னி வாழை" வெட்டும் நிகழ்வு நடைபெறும். அத்துடன் "வித்தைகளை ஆரம்பிக்க உகந்த தினம் விஜயதசமி" எனும் விடயப் பொருளில் தெய்வீகப் பேருரையினை மதுரகவி காரை எம். பி அருளானந்தன் ஆசிரியர் நிகழ்த்தவுள்ளார் என்பதை ஆலய தர்மகர்த்தா திருமதி விஜயமாலினி ஆனந்தநடேசன் அறியத் தருகின்றார். (8)

## குளவி கொட்டியதில் 6 மாணவர்கள் வைத்தியசாலையில்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு விசுவமடுப்பகுதியில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவர்கள் மீது குளவி கொட்டியதில் 6 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

முல்லைத்தீவு 12ஆம் கட்டை தபால் நிலைய வீதிப் பகுதியில் இராணுவத்தினரால் தோட்டம் செய்யப்படும் காணியிலுள்ள மா மரத்தில் இருந்த குளவிகள் கலைந்ததன் காரணமாக 6 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் உடனடியாக தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே.கரிகாலன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (8-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 200 | 250 |
| தக்காளி | 200 | 250 | 250 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 300 | 250 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 150 | 200 |
| கரட் | 200 | 250 | 300 | 250 | 250 |
| பூசணி | 60 | 60 | 100 | 40 | 50 |
| புடோல் | 120 | 200 | 150 | 150 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 600 | 400 | 450 | 600 |
| வெண்டக்காய் | 120 | 200 | 100 | 200 | 350 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 250 | 250 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 350 | 300 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 | 200 | 250 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 300 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 140 | 60-120 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1000 | 1000 | 1100 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-230 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 700 | 1000 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
31 . 05 . 1940



விண்ணில்
25 . 09 . 2025

## திருமதி. செந்தில்ஞானவதி சிவலிங்கம்

### இளைப்பாறிய மருந்தாளர் (வறுத்தலைவிளான்- தற்போது கனடா)

யாழ்.தெல்லிப்பழை வறுத்தலைவிளானை பிறப்பிடமாகவும், கனடா - Scarborough Ontarioவை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தில்ஞானவதி சிவலிங்கம் அவர்கள் 25.09.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான க.சுப்பிரமணியம் சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் சிவலிங்கம் அவர்களின் அருமை மனைவியும், ராஜினி, ரமேஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலகாந்தன், கோமதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருத்திகா, தருண் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், கெவின், ரமேனா, சிவானா, சாயினா ஆகியோரின் அருமை அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான குகஞானவதி (தவம்), குணஞானவதி (குணம்), குலஞானவதி(குஞ்சு), குகஞானலிங்கம் (ராசன்), கெஜஞானவதி (பேபி) மற்றும் மகாஞானவதி (பபி) ஆகியோரின் ஆசைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், குலசிங்கம், மகாலிங்கம், ராஜசிங்கம் மற்றும் யோகம்மா, சண்பகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான, தர்மலிங்கம் - நேசம்மா மற்றும் வீரசுப்பிரமணியம் - நாகேஸ்வரி, இராசலிங்கம் - ராசமலர் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2025 நாளை புதன்கிழமை 8.00 தொடக்கம் 11 மணிவரை கிரியைகள் Ajax crematorium and visitation centre [384 Finley Ave, Ajax, on L1s, 2E3, canada] இல் நடைபெற்று பூதவுடல் 11 மணிக்கு தகனம் செய்யப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்

பேறாமகன் - டாக்டர்.கு.சுரேஷ்குமார்

(5549)

# திரிபோஷா உற்பத்தி இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் திரிபோஷா உற்பத்தி கடந்த செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் அமல் அத்தநாயக்க தெரிவித்தார்.

உற்பத்திக்குத் தேவையான சோளம் கிடைக்காததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திரிபோஷா உற்பத்திக்காக 18,000 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் முன்னர் வழங்கப்பட்டிருந்தாலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் ஒப்புதலுக்கான திருத்தங்களை முன்வைத்தார்.

அந்த திருத்தங்கள் அடங்கிய புதிய அமைச்சரவை பத்திரம் ஒக்டோபர் 07 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறும் வரை சோள இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, திரிபோஷா உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் சோளம் இறக்குமதி மீண்டும் தொடங்கியதும் திரிபோஷா உற்பத்தி இயல்பு நிலைக்குத் திரும்பும் எனத் தெரிவித்தார். (நி)

# சர்வதேசத்திடம் நீதிகோரி
## 5 ஆவது நாளாகவும் போராட்டம்



வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை 5 ஆவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறித்த போராட்டம் யாழ் செம்மணியில் கடந்த 25ம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 1ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப் போராட்டத்தில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பொது அமைப்புகள் முஸ்லீம் மக்கள் எனப்பலரும்இணைந்து கொண்டனர். (8-33)

# பெயர் மாற்ற அறிவித்தல்

வற்றாப்பளை முள்ளியவளையில் வசிக்கும் **இராசம்மா** எனும் பெயரை இன்று முதல் **மேரி நீற்றா** என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள மேரி நீற்றா**

(5545)

# கனவு இல்லம் மெய்ப்பட அனைவரும்
## அறிந்திருக்க வேண்டிய பொறியியல் நுட்பங்கள்




ஒவ்வொருவருக்கும் சொந்தமாகக் கட்டிய ஒரு வீடு என்பது ஒரு கனவு. ஒருவர் பொறியியலாளராக இருக்கலாம், வைத்தியராக, ஆசிரியராக, வக்கீலாக, கணக்காளராக அல்லது ஒரு சாதாரண மனிதராக இருந்தாலும் கூட, **"ஒரு நாள் நான் என் கனவு இல்லத்தில் வசிக்க வேண்டும்"** என்ற எண்ணம் உள்ளவர்களே.

ஆனால், இந்தக் கனவு எத்தனை பேருக்கு நனவாகிறது? எளிதாகக் கூற முடியாது. சிலர் வீடு கட்டத் தொடங்கி இடையில் நிறுத்தி வைக்கும் நிலைக்கு சென்றுவிடுகின்றனர். சிலர் வீடு கட்டி முடித்தும், **"இது என் கனவு இல்லமல்ல"** என்று ஏமாற்றத்துடன் வாழ்கிறார்கள்.

**"கல்யாணம் கட்டிப்பார் சொந்தமாக வீடு கட்டிப்பார்"** என்கிற கருத்து எமது சமுதாயத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுவதுண்டு. அதாவது வீடு கட்டி முடிப்பதென்பது சாதாரண விடயமல்ல என்பதற்காகவே அப்படி சொல்வதுண்டு.

வீடு கட்டுவது என்பது பொறியியல் சார்ந்த செயல்.

**ஆனால், இன்று கட்டப்பட்டு வரும் பெரும்பாலான வீடுகள், ஒரு பொறியியலாளனின் ஆலோசனையோ அல்லது தகவலறிந்த தொழில்நுட்பவியலாளரின் வழிகாட்டுதலோ இல்லாமல் நடக்கின்றன.**

இதன் விளைவாக,- **"60 இலட்சத்தில் வீடு கட்டலாம்"** என்ற வாக்குறுதியில் துவங்கிய வீடு கட்டும் வேலை, 60 இலட்சம் செலவிட்டும், வீடு பாதி கூட முடியாமல் நிற்கும் நிலை ஏற்படுகிறது. மறுபுறம், 60 இலட்சத்தில் கட்டி முடிக்க வேண்டிய வீடு, 1.5 கோடி ரூபாய் செலவழித்து கட்டியும் கூட **"இது என் கனவு இல்லம் அல்ல"** என்ற ஏமாற்றத்தை தருகின்றன. இவை போன்ற பல நிகழ்வுகள் பலரின் கனவுகளை, சிதைக்கும் நிகழ்வுகளாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, கடந்த காலத்தில் பொருளாதார நெருக்கடி நிலைமை வந்தபோது மின்சார தட்டுப்பாடு ஏற்பட்ட போது, அதிக செலவில் கட்டப்பட்ட வீடுகளிலே கூட, உள்ளே இருக்க முடியாமல் மக்கள் வெளியே கழிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஏனெனில் இந்த வீடுகளில்,- **இயற்கை ஒளி புகாத வகை- காற்றோட்ட மற்ற அமைப்பு** என பல பொறியியல் தவறுகள் காணப்படுகின்றன.

அத்துடன், பல வீடுகளில் தண்ணீர் ஒழுகும் பிரச்சினை வழக்கமாகவே ஏற்பட்டுவருகிறது. சில இடங்களில், சுவர்களில் மற்றும் நிலங்களில் வெடிப்புகள் தோன்றுவது பற்றிய புலம்பல்களும், அத்துடன் கசிவுகள், பிளவுகள் ஏற்படுகின்றன என்பதும் அன்றாடம் கேட்கும் விடயங்களாகி விட்டன.

கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து, கடன்களில் மூழ்கி, அருமையான கனவுகளோடு கட்டிய வீடு, இறுதியில் நிம்மதி தராத இடமாக மாறி விடுகிறது என்பதே இன்றைய நாள் நிலைமை.

இந்த கட்டுரைத்தொடரின் நோக்கம், எங்கள் மாநிலத்தில் பொறியியல் பயன்பாடுகள் (Engineering Applications) முறையாகவே நடைபெற வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

இக்கட்டுரைகளில்,

- மக்கள் வீடுகள் கட்டுவதில் செய்வதான **பிழைகள்,**
- **தேவையற்ற அதிக செலவுகள்,**
-மற்றும் **தவறான தொழில்நுட்ப பயன்பாடுகள்** ஆகியவை சுட்டிக்காட்டப்படும்.

எந்த வகையிலும் எவரும் ஏமாந்து போகாமல் இருப்பதற்காக அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை பொறியியல் நுட்பங்கள் தொடர்பாக இக்கட்டுரைகளின் வாயிலாக பேசிக்கொள்ளப் போகின்றோம். அதுவும் இலகு தமிழில் இஞ்சினியரிங் பேசிக் கொள்ளப்போகின்றோம்.

இதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதோடு, **"கனவு இல்லம்"** என்பது வெறும் கனவாக இல்லாமல் நனவாக மாறும் என நம்புகிறோம்.

மாநிலம் பயனுற வேண்டும்
மக்கள் மகிழ்வுற வேண்டும்.

(தொடரும்)

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்**
**வடக்கின் அத்தியாயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரூர் துயர சம்பவம் பலி 41 ஆக உயர்வு

### 11 பேருக்கு தீவிர சிகிச்சை



(கரூர்)

கரூரில் நடந்த தமிழக வெற்றிக்கழக பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை, 41 ஆக உயர்ந்தது.

அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் 11 பேருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கரூர், வேலுச்சாமி புரத்தில், கடந்த சனிக்கிழமை இரவு தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்ட போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அதில், 39 பேர் உயிரிழந்தனர்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த, கரூர், சணப்பிரட்டி தொழிற்பேட்டையைச் சேர்ந்த நவீன், 34, என்பவர், நேற்று முன்தினம் மதியம் உயிரிழந்தார்.

இதனால், பலி எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது.

வேலுச்சாமிபுரத்தில், நேற்று முன்தினம் இரவு, த.வெ.க., தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்ட போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மேலும் கரூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் 11 பேருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி 90இற்கும் மேற்பட்டோர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி)

## ஈரான் மீது

## பொருளாதாரத் த

**(ஜெனீவா) ■■■■■■■■■■■■ அணுசக்தி திட்டங்களை கைவிட மறுக்கும் ஈரான் மீது ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.**

2015ஆம் ஆண்டு உலக வல்லரசுகளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தது.

ஆனால் ஒப்பந்த விதிகளை மீறியதற்காக, அதே ஒப்பந்தத்தில் இடம்பெற்ற "ஸ்னாப்பேக்" என்ற அம்சம் மூலம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது இந்த ஒப்பந்தம் செய்வதற்கு முன் ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் 10 வருடங்கள் கழித்து மீண்டும் செயற்பாட்டுக்கு வந்தன.

தற்போது அமுலுக்கு வந்துள்ள இந்தத் தடையால் ஈரானின் வெளிநாட்டுச் சொத்துகள் முடக்கப்படும். ஆயுத விற்பனை ஒப்பந்தங்கள் நிறுத்தப்படும். மேலும் அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களை மேம்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

முன்னதாக ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிப்பதற்காக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கொண்டு வந்த வரைவு தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளின் வாக்கெடுப்புக்காக முன்வைக்கப்பட்டது.

ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகள் ஈரானுக்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிராக



## யாரையும் சந்திக்க விரும்பாத விஜய்

(சென்னை)

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் வீட்டில், அவரை சந்திக்க வந்த கட்சி நிர்வாகிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய், கரூரில் மேற்கொண்ட பிரசாரத்தில், கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, சென்னையில் விஜய் வீட்டில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னையில், இ.சி. ஆரில் இருந்து, விஜய் வீட்டுக்கு செல்லும், கேசுவரினா டிரைவ் தெருவில் பொலிஸார் தடுப்பு அமைத்து சோதனை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, அக்கட்சியின் நிர்வாகிகள் சிலர், விஜயை சந்திக்க, சென்னையில் அவரது வீட்டின் முன் கூடினர். அப்போது, விஜயுடன் இருக்கும் முக்கிய நிர்வாகிகள், "விஜய் இப்போது யாரையும் சந்திக்க விரும்பவில்லை. இங்கு கூட்டம் சேர்க்காதீர்கள். இது வேறுவிதமான பிரச்சினையை ஏற்படுத்தும்" என அறிவுறுத்தினர். இதையடுத்து, கட்சி நிர்வாகிகள் கலைந்து சென்றனர். (நி)



## மஹாராஷ்டிரா

## 10 பேர் உ

(மும்பை)

மஹாராஷ்டிராவில் கொட்டி தீர்த்த கனமழை காரணமாக, 10 பேர் உயிரிழந்தனர். மும்பை, தானே, நாசிக் உள்ளிட்ட இடங்களுக்கு வானிலை மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மஹாராஷ்டிராவில் மும்பை, தானே உள்ளிட்ட இடங்களில் கடந்த சில நாட்களாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது.

மும்பையில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை கொட்டி தீர்த்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# மீண்டும் தடைவிதிப்பு!



வாக்களித்தன. இரண்டு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.


இதையடுத்து, வரைவுத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

இதைத் தொடர்ந்து ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமுல்படுத்துவதை ஆறு மாதங்கள் தாமதப்படுத்த கோரி நேற்று முன்தினம் ரஷ்யா மற்றும் சீனா கொண்டுவந்த வரைவுத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிராகரித்தது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் தடைகள் அமலுக்கு வந்தன.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் ஈரானுக்கு இந்த தடைகள் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தங்கள் மீது தடை விதிக்க ஐ.நாவுக்கு உரிமை இல்லை என்றும் இந்த தடைகளால் தங்களுக்கு எந்த பொருளாதார பாதிப்புகளும் இருக்காது என்றும் ஈரான் தெரிவித்துள்ளது. (நி)



# மிச்சிகன் தேவாலயம் மீது வன்முறைத் தாக்குதல்

## 4 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க மிச்சிகன் தேவாலயத்திற்குள் துப்பாக்கிதாரி ஒருவர் வாகனத்தை ஓட்டிச் சென்று, துப்பாக்கிச்சூடு நடத்தி, கட்டடத்திற்கு தீ வைத்துள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவத்தினால் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டனர் மற்றும் எட்டு பேர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டெட்ராய்டிலிருந்து வடமேற்கே 60 மைல் (100 கி.மீ) தொலைவில் உள்ள கிராண்ட் பிளாங்கில் உள்ள பிந்தைய நாள் புனிதர்களின் இயேசு கிறிஸ்துவின் தேவாலயத்தின் மீதான தாக்குதல், நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டின் போது நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிச்சிகனில் உள்ள பர்ட்டனைச் சேர்ந்த 40 வயதான தொமஸ் ஜேக்கப் சான்ஃபோர்ட் என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், பின்னர் தேவாலய கார் நிறுத்துமிடத்தில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதிகாரிகள் இந்த சம்பவத்தை "குறிவைக்கப்பட்ட வன்முறைச் செயல்" என்ற கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.

ஆனால் தாக்குதலின் நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். (நி)

# கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தமிழக வெற்றிக்கழகம் மனுத்தாக்கல்

(கரூர்)

கரூர் கூட்ட நெரிசல் குறித்து சுயாதீன விசாரணை கோரி நடிகரும் அரசியல்வாதியுமான விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தின் சட்டப் பிரிவு சென்னை மேல்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீதிபதி எம். தண்டபாணி முன்னிலையில் எஸ். அறிவழகன் தலைமையிலான சட்டத்தரணிகள், இந்த வழக்கை சிபிஐ அல்லது சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் சுயாதீன விசாரணைக்காக பரிந்துரைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதேநேரம், இந்த சம்பவத்திற்குப் பின்னால் சதி இருப்பதாகக் கூறி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்திலும் கட்சி முறைப்பாடு அளித்துள்ளது.

முன்னதாக, நடிகர் விஜயின் சென்னையில் உள்ள அவரது வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து, பொலிஸார் பாதுகாப்பு சோதனை நடத்தினர்.

நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் மோப்ப நாய்கள் மற்றும் வெடிகுண்டு செயலிழக்கும் படையினர் நிறுத்தப்பட்டனர்.

கரூரில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் பிரச்சார கூட்டத்தின் போது எதிர்பாராத விதமாக கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 41 பேர் உயிரிழந்த சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தமிழகம் மட்டுமின்றி தேசிய அளவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



41 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் பல்வேறு கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அதாவது திமுக மற்றும் அதன் கூட்டணி தலைவர்கள் தவெக தலைவர் விஜய் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

ஆனால் எதிர்க்கட்சிகளான அதிமுக, பாஜக, கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் பல்வேறு விடயங்களை எடுத்துக்கூறி ஆளும் கட்சியின் சதி வேலை என சந்தேகங்களை எழுப்பி வருகின்றனர். குறிப்பாக சமூக வலைத்தளங்களில் விஜய்க்கு ஆதரவாகவே குரல்கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# ...வில் கனமழை ...உயிரிழப்பு

இதனால், நகரின் முக்கிய சாலைகள் வெள்ளக்காடாகின.

மாநிலம் முழுவதும் பெய்த கனமழை காரணமாக 10 பேர் உயிரிழந்தனர். மழையால் பாதிக்கப்பட்ட இடத்தில் இருந்து 11,800இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

ஆற்றின் கரையோரத்தில் உள்ள கோவில்கள் வெள்ளத்தில் மூழ்கின.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக மீட்பு பணி மேற்கொள்ள வேண்டும் என மஹாராஷ்டிரா முதல்வர் பட்னவிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனக் கண்ணாடிகளில் பதவிகளை காட்சிப்படுத்தத் தடை!

(கொழும்பு)

வாகனங்களின் கண்ணாடிகளில் தொழில் பதவிகளை காட்சிப்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் குறித்த விடயத்தை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், சிலர் தங்கள் நிலையை சமூகத்திற்குக் காட்டுவதற்காக வாகனங்களின் கண்ணாடிகளில் இதுபோன்ற ஸ்டிக்கர்களை ஒட்டுகிறார்கள்.

வாகனங்களின் கண்ணாடிகளில் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பிற நிபுணர்கள் என்பதைக் குறிக்கும் ஸ்டிக்கர்களை ஒட்டுவது சட்டவிரோதமானது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருமான வரி உரிமம் மட்டுமே வாகனங்களின் கண்ணாடிகளில் ஒட்ட அனுமதிக்கப்படுகிறது.

மேலும் வாகனங்களின் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்களை அகற்ற காவல்துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# மதுபோதையில் சாரத்தியம் 35 சாரதிகள் கைது!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,451 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 694 பேரும், சந்தேகத்தின் பேரில் 26 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 278 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 173 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 35 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 16 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4229 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- RC
நட்சத்திரம்: சுவாதி
12இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் Bsc, Developer (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16027

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா-35 1/2
உயரம்- 5'8"
தகைமை/தொழில் -A/L, Super Market&Travels
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16028

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:பூராடம்
7இல்செவ்
உயரம்:5 1/2
தகைமை/தொழில்:BED, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16030

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L, Australia
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16033

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-33 1/2
12இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L, கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16034

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா-5 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Dip in English, Aari Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16046

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
7இல்செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Canada)
தொ.இ: G/16048

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-விசாகம்
தகைமை/தொழில்: Degree, Work
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Only UK)
தொ.இ: G/16050

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
7இல்செவ்
கி.பா - 52
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc,PHD,Data Scientist
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16051

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:அனுசம்
7இல்செவ்
கி.பா -48
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc,MSc,Project Engineer(USA)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


# இன்று ஒரு தகவல் 455



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆசையும் சினமும்!

இந்த உலகத்திலே மனிதன் எவ்வளவோ தவறுகள் செய்கிறான். அதற்கெல்லாம் என்ன காரணம்?

அதைப்பற்றிய ஆராய்ச்சிதான் இன்றைக்கு!

"இதுக்கு ஆராய்ச்சி என்னத்துக்கு? அது தெரிந்த விடயம்தானே" என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் அப்படி அலட்சியமாக இந்த விடயத்தை விட்டுடக்கூடாது! பொதுவாக எல்லோரும் நினைக்கலாம்.

"எது சரி? எது தவறு? என்று தெரியாததினாலே மனிதன் தவறு செய்கிறான்" என்று! அப்படி சொல்லிவிட முடியாது!

மனிதன் தெரிந்தேதான் தவறுகள் செய்கிறான்.

இப்போது உதாரணத்துக்கு ஒரு சாலையிலே இடது பக்கமாக போக வேண்டிய ஒருவர் நடுக்கோட்டை தாண்டி வலது பக்கமாக வண்டியை ஓட்டிக்கொண்டுப் போகிறார். "என்னப்பா இது தவறு இல்லையா?" என்று அவரிடம் கேட்டால். "அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ உன் வேலையை பார்த்துக்கொண்டு போ!" என்கிறார். வலது பக்கமாக போவது தவறு என்று தெரிந்தேதான் அவர் அப்படி போகிறார். பெரிய உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் கூட "இலஞ்சம்" வாங்கிறார்கள்!

அவர்களுக்கெல்லாம் "இலஞ்சம்" வாங்கிறது தவறு என்று தெரியவில்லை என்றால் அர்த்தம்? திருடுவது தவறு என்று தெரியாமலா மனிதன் திருடுகிறான்? நல்லா தெரியும்.

நீங்கள் வேணும் என்றால் கேட்டுப் பாருங்கள்! "வேறு வழியில்லை. அதனாலே திருடுகிறேன் என்பான்! திருடுவது ஒரு புண்ணியமான காரியம் என்று திருடனே கூட சொல்ல மாட்டான் "திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரியும்" என்பதை விளக்குவதற்காக ஒரு பெரியவர் ஒரு கதை சொன்னார்.

இரண்டு திருடர்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு வீட்டுக்குப் போய் 10,000 ரூபாயை திருடிக்கொண்டு வந்துவிடுகிறார்கள் ஒரு காட்டு வழியாக வந்தார்கள். இன்னும் விடியவில்லை ஆனால் இரண்டு பேருக்கும் தூக்கம் கண்ணை சுத்தியது!

"சரி. இப்படி ஒரு மரத்தடியிலே படுத்துத் தூங்குவோம்! காலையில் விடிந்ததும் இந்த பணத்தை இரண்டு பேரும் பங்கு போட்டுக்கொள்வோம்!" என்று முடிவு செய்தார்கள்! அதே மாதிரி படுத்து தூங்கிவிட்டார்கள்! நடுராத்திரியிலே ஒரு திருடன் முழிக்கிறான். விடியும் வரைக்கும் காத்துக்கொண்டிருந்தால் 5000 தான் கிடைக்கும். இப்பவே கம்பி நீட்டினால் 10000 கிடைக்கும். யோசித்துப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வருகிறான்.

மெதுவாக அந்த 10,000த்தையும் சுருட்டிக்கொண்டு ஓடிப் போய்விடுறான் விடியுது" அடுத்தவன் எழுந்து பார்த்தான்! பணத்தையும் காணவில்லை! பாகஸ்தனையும் காணவில்லை! இந்த திருடன் அந்தத் திருடனை திட்டுகிறான்!

"திருட்டு பயல் அயோக்கியப் பயல்! இப்படி அநியாயமாக கிளப்பிக்கொண்டுப் போயிட்டானே! என்கிறான். "இதுலேயிருந்து என்ன தெரியுது? தெரியுமா எடுத்துக்கொண்டுப் போவது திருட்டு.

தெரிந்துதான் இருக்கு! அதனாலேதான் அடுத்தவனை பார்த்து இப்படி திட்டுறான் அதனாலே தெரியாமலே மனிதன் தவறு செய்கிறான் என்று சொல்வது சரி இல்லை அப்படி என்றால் மனிதன் செய்த தவறுக்கு காரணம் என்ன? இதே சந்தேகம் அர்ச்சுனனுக்கும் வந்தது.

அதனாலேதான் அவன் பகவானை பார்த்து கேட்கிறான். தன் விருப்பத்திற்கு விரோதமாக, ஏதோ ஒரு சக்தியினாலே, பலாத்காரமாக இழுக்கப்பட்டது மாதிரி பாவம் பண்றானே அந்த சக்தி என்ன? என்று கேட்கிறான் பகவான் பதில் சொல்கிறார்.

காமமும் குரோதமும்தான் அந்த சக்திகள் அதாவது ஆசையும் சினமும்! இது இரண்டும் உன்னுடைய எதிரிகள் என்பதை புரிந்துகொள் என்கிறார்.

இன்னமும் நுணுக்கமாக பார்த்தால் காமத்தினுடைய மறு உருவங்கள்தான் குரோதமும் லோபமும்! ஆசை நிறைவேறவில்லை என்றால் குரோதம் அதாவது கோபம்! நிறைவேறிச் சின்ன லோபம் அதாவது பேராசை! பாவத்தை கண்ட்ரோல் செய்யும் மெயின்ஸ்விட்ச் எது என்று இப்போதுதான் தெரிகிறது!

அதற்கு மனிதன் தெரிந்தேதான் தவறு செய்கிறான் என்று பேசிக்கொண்டோமே அதற்கு ஒரு உதாரணம். ஒரு ஆள் ஹோட்டலிலே சாப்பிடப் போனான். சாப்பிட்டு முடித்தான் எழுந்திரிந்து வந்து முதலாளியிடம் பில்லைக் கொடுத்தான் காசு கொடுக்கவில்லை! முதலாளி "பணம் கொடு" என்று கேட்டார். இவன் "என்னிடம் பணம் இல்லை!" என்றான். முதலாளி கொஞ்சம்கூட அலட்டிக்கவில்லை! உள்ளேயிருந்து ஒரு ஆளைக் கூப்பிட்டார்.

இவனைக் கூப்பிட்டுக்கொண்டுப் போய் இட்லி மா ஆட்டச்சொல்லு!" என்றார். இவனும் கவலைப்படாமல் உள்ளே போனான்.

அப்போ அழைத்துக்கிட்டுப் போகிற நபர் கேட்டான்.

"ஏன் சார் சாப்பிடுவதற்கு முன்னாடி இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றான் "தெரியும்... காசு இல்லை என்பதும் தெரியும்! காசில்லாமே சாப்பிட்டால் மாவாட்டணும் என்பதும் தெரியும்!" என்றார். இவர். "அப்படி என்றால் நீங்கள் உங்கள் வீட்டுலேயே சாப்பிட்டிருக்கலாமே" என்றான். அதுக்கு இவர்... "அது எப்படி? அங்கே சாப்பிட்டாலும் நான் இதே வேலையை செய்ய வேண்டி இருக்குமே!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில்
# எரிபொருள் நிரப்பு நிலையம்
## எதிர்வரும் 4 ஆம் திகதி ஒப்பந்தம்

**(யாழ்ப்பாணம்)........................ நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்த பணிகள் எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.**

நெடுந்தீவு பகுதியில் எரி பொருள் நிரப்பு நிலையம் இல்லாத காரணத்தால், அப்பகுதி மக்கள் வேலணை பகுதிக்கு வந்தே தமக்கான எரிபொருட்களை பெற்று செல்கின்ற னர்.

நெடுந்தீவில் இருந்து குறி காட்டுவானுக்கு சுமார் ஒரு மணி நேரம் படகில் கடல் பயணம் மேற்கொண்டு, குறி காட்டுவானில் இருந்து, வேலணை பகுதிக்கு தரை வழியாக சென்று எரிபொரு ட்களை கொள்வனவு செய்து, மீண்டும் நெடுந்தீவுக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலையிலையே அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின் றனர்.

இந்நிலையில், நெடு ந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க வேண் டும் என நீண்ட காலமாக அங்கு வாழும் மக்கள் கோரிக்கைகளை முன் வைத்து வந்த நிலையில் , தற்போது எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கும் பணிகளுக்கான ஒப்பந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெற வுள்ளன.

நெடுந்தீவு போன்றே ஏனைய கடல் கடந்த தீவுக ளுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என தீவுகளில் வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (8-33)

## மன்னாரில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டி:
# சம்பியனானது நானாட்டன் டைமன் ஸ்ரார்

மன்னார் பனங்கட்டு கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அமரர் தர்ம லிங்கம் மனோன்மணி தம்பதிகளின் நினைவாக இடம் பெற்ற உதைபந்தாட்ட போட்டியின் இறுதி நிகழ்வு கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை புனித சூசையப்பர் விளை யாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் அணிக்கும், நானாட் டன் டைமன் ஸ்டார் அணிக் கும் இடையில் இறுதி போட்டி இடம்பெற்றது.

இதன் போது நானாட்டன் டைமன் ஸ்டார் அணி முத லிடத்தையும் , பனங்கட்டு கொட்டு சென் ஜோசப் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இதன்போது வெற்றி பெற்ற அணிகளுக்கு பண பரிசில்கள் மற்றும் வெற்றிக் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (3-285)


ஹரிஓம நமோ நாராயணாய ஓம் ஸ்ரீராம ஜெயம்

## யாழ்- வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேர்- 01.10.2025

திருக்கோயில்களில் விழாக்களைத் தரிசிப்போர் ஆசார சீலராகச் சென்று சிவாச்சாரியரைக் குருவாக எண்ணி மெய்யன்போடு தம்ப, விம்ப, கும்ப பூசைகளை மெய்யன்போடு தரிசிப்போம்.

01.10.2025 -திருத்தேர் வடம் பிடித்து மும்மலம் நீக்கி பெருமாள் பாசுரம் படித்து பேரருள் பெறுவோம்.

திருவாய் மொழி நூற்றந்தாதி- பிறவிப் பிணியானது இல்லாமல் மாறிப்போகும் உரை பாசுர எண் -25

**சொன்னாவில் வாழ்புலவீர்!**
**சோறு கூறைக்காக**
**மன்னாத மானிடரை**
**வாழ்த்துதலால்,- என்னாகும்?**
**என்னுடனே மாதவனை**
**ஏத்தும், எனுங்குருகூர்,**
**மன்னருளான் மாறுஞ்சன்மம்.**

நாவில் சொற்களைக் கொண்டி ருக்கின்ற, இப் புவி வாழ் புலவர். பெரு மக்களே! சோற்றுக்காகவும், உடைக் காகவும். நிலையில்லாத மனிதர்களையும், நிலையில்லாத பொருள்களையும் வாழ்த்து வதால் பயன் இல்லை.

ஆகையினால் எம்பெருமான் தேர்வடம் கைப்பிடித்து, உன் திருவடிகளையே அடி யேன் அடையும் படியாக " கோவிந்த நாம சங்கீதனகம்", தமிழ் மறைகளைப் பாடி, கோவிந்தா. கோவிந்தா என நம்மாழ் வார்களின் பாசுரங்களைக் கசிந்து உருகி ஓதி இடம்பிடிப்போம் வைகுந்தத் தில்- வான்வெளியில் தேவர்களும், முனிவர்களும், நம்மாழ்வரும், புரட்டாசி மாதத்தில் நம்முன்னோர்களாகிய தென்புலத் தாரும் ஆசீர்வதித்து எமது மலங்களை நீக்குவார்கள் மன்னருளான் மாறும் சன்மம்- பிறவிப் பிணி நீங்கும்

02.10.2025- காலை தீர்த்தோற்சவம் நாம் எல்லாரும், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் தமிழ் மறையாகிய "திருவாய் மொழி" பாசுரங்கள் அனைத்தும் ஐந்து பெருந் தத்துவங்களாக உள்ள பெரிய எம்பெருமானுடைய இயல்புகள், உயிரின் உண்மையான நிலையையும், எம்பெரு மானை நாம் அடையக்கூடிய வழியாகிய பக்திமார்க்கத்தையும். எம்பெருமானை அடைவதற்குத் தடையான முன்னைய முன்வினையாகிய விரோதியாகிய இயல் பையும், ஐந்தாவது இறுதியாக நிலை யான வாழ்வாகிய வீடுபேற்றினையும் எடுத்துரைப்பதாகும்.

தீர்த்தோற்சவம் தரி சித்து பாசுரங்கள் இறை வனுடன் மனம் ஐக்கிய மாக நாம் உற்று நோக்கி குறையேது மின்றி பெருந்தேனை அருந்தி மகிழ்ச்சி யுறு வோமாக!

ஆறா அன்பில் அடியேனுன் அடிசேர் வண்ணம் அருளாயே
கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவி ந்தா கோவிந்தா

**திருவருளும் நின்று குருவருளும் பெற்று திருவாழ்வார் பன்துணை நின்று நிலைத்த பெரும்பேறு வேண்டி கமலக்கண் பெற்ற பேசும் பெருமான் சரணம்.**

(C-3984)



க.கு.க.சிவபாலன் (k.k.k)
அன்புடன் நாலாயிரம் திவ்விய பிரபந்தம் ஓதும் அடியார்


# இராசிபலன்

**30.09.2025**
**புரட்டாதி 14 , செவ்வாய்க்கிழமை**
**அட்டமி பிற்பகல் 2.37 மணிவரை**

**பூராடம் பின்னிரவு 5.44 மணிவரை**
**சுப நேரம் 10.32-12.02 மணிவரை**
**இராகுகாலம் 3.02-4.32 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**மிருகசீரிடம்**
**அட்டமி- நவமி**

**வளவன்**


மேஷம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், தேகநலன் சீராகும்.


ரிஷபம்

உஷ்ண சம்பந்தமான ரோக நிலை ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், மனக்குழப்பம் தீர இஷ்ட தெய்வங்களை வழிபட வேண்டிய நாள்.


மிதுனம்

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்,தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.


கடகம்

உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும்.


சிம்மம்

உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,பணத்தேவைகள் பூர்த்தியாகும்.


கன்னி

பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப காரியச் செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

சுறுசுறுப்புடன் செயற்படும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு,பகல் பாராது பாடுபடுவீர்கள், காரிய வெற்றிக்கு அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.


மகரம்

வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மற்றவரை மகிழ வைப்பதே உன் மகிழ்ச்சிக்கு வழி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 875





எவ்வாறு சொன்னால் அவள் தயங்காமல் தங்களுடன் வருவாள் என்று பேசி முடிவு செய்திருந்தார்கள். அந்தப்படியே பூங்குழலி அவள் அத்தையிடம் கூறினாள். சக்கரவர்த்தி நோய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருப்பதாகவும், எந்த நேரத்திலும் இந்த மண்ணுலகை விட்டுப் போய்விடலாமென்றும், அவருடைய மூச்சுப் பிரிவதற்கு முன்னால் ஊமை ராணியை ஒரு தடவை பார்க்க ஆசைப்படுகிறார் என்றும், ஊமை ராணியை அவர் இத்தனை காலமாகியும் மறக்கவில்லையென்றும், அவளைப் பார்த்தால் ஒரு வேளை அவர் புதிய பலம் பெற்று இன்னும் சில காலம் உயிர் வாழக்கூடும் என்றும் சமிக்ஞை பாஷையில் தெரியப்படுத்தினாள். அதற்காகவே தான் முதன்மந்திரி அநிருத்தப்பிரம்மராயர் அவளை எப்படியாவது பிடித்து வர ஆட்களை அனுப்பியதாகவும் முதன் மந்திரியின் அரண்மனையிலேதான் முதல் நாளிரவு தான் தங்கியிருந்ததாகவும் கூறினாள். சக்கரவர்த்தியின் அருமைப் புதல்வி குந்தவை தேவி ஊமை ராணியைத் தன் தந்தையிடம் அழைத்துப் போவதற்காக முதன்மந்திரி வீட்டில் காத்திருப்பதாகவும் தெரியப்படுத்தினாள். இதையெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்ட பிறகு மந்தாகினி பூங்குழலியுடனும் திரு மலையுடனும் புறப்பட்டு வர இசைந்தாள். கோட்டை வாசலுக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது, சக்கரவர்த்தியின் வேளக்காரப் படையினர், கோட்டைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் போகட்டும் என்று மூன்று பேரும் ஒதுங்கி நின்றார்கள். வேளக்காரப் படையை மந்தாகினி கண்கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். வேளக்காரப் படையைத் தொடர்ந்து ஒரு பெருங் கூட்டம் கோட்டைக்குள்ளே பிரவேசித்தது. அவர்களைத் தடுத்து நிறுத்தவும் கோட்டைக் கதவுகளைச் சாத்தவும் காவலர்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை. "இந்தக் கூட்டத்தோடு நாம் போக வேண்டாம். முதன்மந்திரி அரண்மனைக்குப் போகப் பிரத்தியேகமான சுரங்க வழி இருக்கிறது. அதன் வழியாகப் போகலாம்" என்றான் திருமலை.


இதைப் பற்றி பூங்குழலி அவளுடைய அத்தைக்குச் சொல்லப் பிரயத்தனப்பட்டாள். ஊமை ராணி அதைக் கவனியாமல் கோட்டைக்குள் போகும் கூட்டத்தோடு சேர்ந்து போகத் தொடங்கினாள். திருமலையும் பூங்குழலியும் பின்னோடு சென்றார்கள். கோட்டைக்குள் பிரவேசித்த பிறகும், திருமலை வேறு தனி வழியாகப் போகலாம் என்று சொன்னதைப் பூங்குழலியின் அத்தை பொருட்படுத்தவில்லை. கூட்டத்துடன் கலந்தே சென்றாள். கூட்டத்தைப் பார்த்து பயப்படும் சுபாவம் உடையவள் இம்மாதிரி செய்வதைக் கண்டு மற்ற இருவருக்கும் வியப்பாயிருந் தது. கொஞ்சதூரம் போன பிறகு கூட்டத்தில் சிலர் மந்தாகினியைக் குறிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தார்கள். "இந்த அம்மாளைப் பார்த்தால் பழுவூர் இளையராணியின் ஜாடையாக இல்லையா?" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். திருமலைக்கும் பூங்குழலிக்கும் இது கவலையை அளித்தது. அவர்கள் மந்தாகினிக்கு முன்னால் போய் நின்று தடுத்து நிறுத்த முயன்றார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குட்டி யானை கணேசனுக்கு பிறந்த நாள்



அன்று குட்டி யானை கணேசனுக்கு பிறந்த நாள், அவனுடைய நண்பர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று அப்பா, அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்பா யானை இரண்டு வாழைத் தார்களைப் பறித்துக் கொடுத்தது. குட்டி யானை கணேசனுக்கு ஒரே சந்தோசம், அவனுடைய நண்பர்களுக்கு வாழைப் பழம் என்றால் உயிர். அதனால் இரண்டு வாழைத் தார்களையும் தன் குட்டித்தும்பிக் கைகளில் கஷ்டப் பட்டுத் தூக்கிக் கொண்டு சென்றது. வழியில் நரியார் வழிமறித்து "குண்டு கணேசா" என்ன கொண்டு போகிறாய்? என்று கேட்டது. குட்டி யானை கணேசனும், என்னுடைய நண்பர்களுக்குப் பழம் கொண்டு போகிறேன் என்று சொன்னது. அப்படியா ரொம்ப சந்தோசம் எனக்கும் இரண்டு சீப் பழம் கொடு என்றது. அதெல்லாம் முடியாது, என்னுடைய நண்பர்களுக்கு மட்டும்தான் கொடுப்பேன் என்று சொன்னது. நான் உன்னை விட மூன்று வகுப்பு அதிகமாப் படிக்கிறேன், எனக்கே கொடுக்க மாட்டேன் என்கிறாயா? என்று கணேசன் பயந்து கொண்டு சரி சரி இந்தா இரண்டு சீப் பழம் மட்டும்தான் என்று சொல்லி நரி யாரிடம் கொடுத்து விட்டு வேகமாக நடந்தது.

கொஞ்சத் தூரம் சென்றதும் வழியில் குரங்கு குசலா வந்து கொண்டிருந்தாள். அவள் குட்டி கணேசன் வகுப்பில்தான் படிக்கிறாள். என்ன தும்பி கணேசா வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு எங்கே போகிறாய்? நான் என் நண்பர்களை பார்க்க போகின்றேன் என்று பதில் சொன்னது குட்டி யானை கணேசன்.

அப்படீயா ரொம்ப மகிழ்ச்சி, அது க்கு வாழைப்பழம் எது க்கு எடுத்துட்டு போகிறாய்? அதுவா எனக்கு பிறந்த நாள் அதுக்குத்தான் என்று குட்டி யானை கணேசன் சொன்னான். ரொம்ப மகிழ்ச்சி, நான் உன்னுடைய வகுப்பில் தானே படிக்கிறேன். எனக்கும் இரண்டு சீப் பழம் கொடுத்துட்டு போ,என்று கேட்டது.முதலில் மறுத்த குட்டி யானை கணேசன் சரி இந்தா என்று பரிதாபப்பட்டு இரண்டு சீப் பழங்களை கொடுத்தது.

அடுத்ததாக கரடியார் எதிரில் வந்து குட்டி யானை கணேசனிடம் வாழ்த்துச் சொல்லி இரண்டு சீப் பழங்களை கொடுக்கச் சொன்னது. குட்டி யானை கணேசனும் வேறு வழியில்லாமல் இரண்டு சீப் பழங்களை கொடுத்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு செய்யப்படாத வாழ்க்கை மதிப்புமிக்க வாழ்க்கை அல்ல. ~ சோக்ரடீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இளைஞர்களுக்கு எழுதும் அவசர மடல்.....

எமதருமை தமிழ் இளைஞர்களுக்கு அன்பு வணக்கம். காலத்தின் தேவை கருதி இம் மடலை அவசரமாக எழுத வேண்டியுள்ளது.

ஆம், ஓர் இனத்தின் எதிர்காலம் என்பது அந்த இனத்தின் இளம் சமூகத்திடம் உள்ளது என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. எனினும் எங்கள் சமகால இளைஞர்களாகிய உங்களை ஒரு கணம் நின்று நிதானித்துப் பார்க்கின்றோம்.

ஒரு தரப்பு இளைஞர்கள் தங்கள் வாழ்வின் பெறுமதியைத் தெரிந்து கொள்ளாமல் தொலைத்து வருகிறார்கள்.

உண்மை. போதைப்பாவனை எங்கள் இளைஞர்களில் ஒரு சாராரை ஆட்கொண்டுள்ளது.

எனினும் அதிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு எங்களிடம் எந்தவிதமான வழிமுறைகளும் இல்லை.

மாறாக, போதைக்கு அடிமையாகிய இளைஞர்களைக் கைது செய்வதும் நீதிமன்றில் நிறுத்துவதும் என்ற நடைமுறை மட்டுமே உள்ளது.

இது ஒரு புறமென்றால், மறுபுறத்தில் மூன்று பெரும் பேய்கள் உங்களைப் பிடித்து சிப்பிலி ஆட்டுகின்றன.

அதில் ஒன்று மதுப்பாவனை, இரண்டாவது அளவுக்கு அதிகமான தொலைபேசிப்பாவனை, மூன்றாவது மிகப்பிரமாண்டமான மோட்டார் சைக்கிள்.

இந்த மூன்று பேய்களும் இளைஞர்களாகிய உங்களின் எதிர்காலத்தை விழுங்கக் காத்திருக்கிறது என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிலும் பிரமாண்டமான மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்காக நீங்கள், உங்கள் பெற்றோர்களைப் படுத்துகின்றபாடு கொஞ்சமா என்ன? இருப்பதை விற்றுச் சுட்டு நீங்கள் கேட்கின்ற மோட்டார்சைக்கிளை பெற்றோர்கள் வாங்கித்தர, நீங்கள் அதனை அதிவேகமாகச் செலுத்தி நீங்களும் இல்லை. மோட்டார் சைக்கிளும் இல்லை என்ற பெரும் இழப்பை ஏற்படுத்தி விடுகிறீர்கள்.

அன்புக்குரிய இளைஞர்களே! உங்கள் பெற்றோர்கள் உங்களைப் பெற்று வளர்ப்பதற்காகப் பட்டபாடுகள் – செய்த தியாகங்கள் கொஞ்சமா என்ன?

எனினும் அதனை நீங்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை. நீங்கள் கேட்டுவிட்டீர்கள். என் பிள்ளை ஆசைப்பட்டுவிட்டான். நான் அதனை வாங்கிக் கொடுக்க மறுத்தால், எத்தகைய விபரீதங்கள் ஏற்படுமோ என்ற ஏக்கத்துடனேயே மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுப்போம் என்ற முடிவை உங்கள் பெற்றோர்கள் எடுக்கின்றனர். ஆனால் நீங்கள் அதைக் கிஞ்சித்தும் உணர்வதில்லை.

இளைஞர்களே! உங்கள் எதிர்காலம் மிகவும் பெறுமதியானது. நீங்களே எங்கள் இனத்தின் – வம்சத்தின் உற்பவம்.

ஆகவே தீயவற்றைக் களையுங்கள். நீங்கள் நினைத்தால் ஒரு கணத்தில் எங்கள் மண் புனிதமடையும். தீமை ஒழியும். அத்தனை பெற்றோர்களும் உங்களால் மகிழ்வர்.

விழித்தெழுங்கள்! பெற்றவர்களை நினையுங்கள்! நீங்களே உங்களைக் கேளுங்கள்! நான் – நாம் செய்வது சரியா என்று. உங்கள் கேள்விகள் நிச்சயம் உங்களை வளப்படுத்தும். வாழ்விக்கும் இது சத்தியம்.

# 2026இல் புதிய வரிகள் விதிக்கப்படமாட்டாது!

## ஜனாதிபதி அநுரகுமார ஜப்பானில் அறிவிப்பு

(டோக்கியோ)

இலங்கையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அநுர குமார திஸா நாயக்க, அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்து உரையாற்றும் போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் சில வரி விகிதங்களைக் குறைப்பது குறித்து கவனம் செலுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த ஆண்டில் இராஜதந்திர உறவுகளில் சமநிலையைப் பேணுவதற்கு இலங்கையினால் முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு, தேசிய ஒற்றுமையை உருவாக்க வேண்டும் எனவும், இலங்கை வரலாற்றில் எந்த இன மோதல்களும் தலை தூக்காத ஆண்டாகக் கடந்த வருடம் வரலாற்றில் இணைவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, அடுத்த ஆண்டு 3 ட்ரில்லியன் ரூபாய் கடனைப் பெறுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அதற்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் தனிப்பட்ட சலுகைகளை எதிர்பார்த்து தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வரவில்லை .

அவர்கள் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

## யாழ். உள்ளிட்ட பல மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

### தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 38 ஆயிரத்து 764 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத்துறை, மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை வாரத்திற்கு ஒருமுறை அடையாளங்கண்டு, டெங்கு நோயைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களை அவர் கோரியுள்ளார்.

ஒருவருக்கு 2 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நிலைமை நீடிக்குமாயின், உடனடியாக வைத்தியரை நாடுமாறும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

## போதைப்பொருள் பாவனை மாணவர்களிடம் அதிகரிப்பு

நாட்டில் போதைப் பழக்கத்திற்கு அடிமையான பாடசாலை மாணவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை போதைப்பொருள் குற்றங்களுக்காக 206 சிறுவர்கள் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் சிறுவர்கள் 39 பேர் நன்னடத்தையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## இதய நோயினால் ஏற்படும் பெரும்பாலான உயிரிழப்புக்கள் தடுக்கப்படக் கூடியவை

உலகளாவிய ரீதியில் இதய நோயினால் ஏற்படும் உயிரிழப்புகளில், 80 சதவீதமானவை தடுக்கக் கூடியவை என இலங்கை இதய நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சம்பத் விதானவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஹார மஹா தேவி பூங்காவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இதய நோய் தொடர்பான உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் எளிமையான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் மூலம் இதய நோயைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதயநோயைத் தவிர்ப்பதற்கு உடற்பயிற்சி, சிறந்த உணவு முறை மற்றும் புகைப்பிடிப்பதைத் தவிர்த்தல் போன்ற சில செயற்பாடுகளும் மருத்துவ பரிசோதனைகளும் அவசியமென இலங்கை இதய நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சம்பத் விதானவசம் தெரிவித்துள்ளார். (நி)

## அதிகரிக்கும் விவாகரத்துக்கள்!

இலங்கையில் சுமார் 1.2 மில்லியன் குடும்பங்களுக்குப் பெண்களே தலைமை தாங்குகின்றனர் என்றும், நாட்டில் அதிகரித்து வரும் விவாகரத்து விகிதம் காரணமாக இந்தக் குடும்பங்களின் எண்ணிக்கை சீராக உயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


களனிப் பல்கலைக் கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனோஷா எதிரிசிங்க, நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனை குறிப்பிட் டார்.

இதன்போது, இலங்கைச் சமூகத்தில் பெண்கள் வகிக்கும் குறிப்பிடத்தக்க பங்கையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களின் நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்துவது அவர்களின் குடும்பங்களின் நல்வாழ்வுக்கும் பரந்த சமூகத்துக்கும் அத்தியாவசியமானது என்று அவர் வலியுறுத்தினார்.

எனவே, பெண்களுக்குப் பொருளாதார ரீதியாக அதிகாரம் அளிக்க வேண்டியதன் அவசர தேவையையும் அவர் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

12

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதன் மூலம் பௌத்தம் நவீன கால கட்டத்திற்கு அறிமுகமாகியது. ஓல்காட் பார்வையில் புத்தர் ஒரு இறுக்கங்கள் இல்லாத சுதந்திர சிந்தனையாளராகவும், பொறுமை, அன்பு, நன்றி ஆகிய குணாம்சங்களைக் கொண்டவராகவும், மேலும் உலகெங்கிலும் உள்ள மனிதர்களைச் சகோதர மனப்பாங்கினின் மூலம் இணைப்பவராகவும் உருவகித்து, அதையே உலகிற்கும் எடுத்துக் காட்டினார். அனகாரிக தர்மபால போன்ற பலரை அவர் ஈர்த்தார்.

**மகா போதி சபை:**

அனகாரிக்க தர்மபால (Anagarika Dharmapala) அவர்கள், 1892 இல் மகாபோதி சங்கத்தை இலங்கையில் தாபித்தார். வண. H. சுமங்கல நாயக்க தேரோ, சங்கத்தின் தலைவராகவும் தர்மபால அதன் செயலாளராகவும் பொறுப்பேற்றனர். இந்தியாவில் மகாபோதி சங்கத்தின் தலைமைப்பீடம் கல்கத்தாவில் அமைக்கப் பெற்றது. அங்கிருந்து "மகாபோதி" என்ற மாத ஆங்கில சஞ்சிகையை தர்மபால பிரசுரித்து வந்தார். இச்சபையும் பௌத்த சமய வளர்ச்சிக்கும், சமய அடிப்படையில் கல்வி பயிற்றும் முயற்சிக்கும் பேருதவி அளித்தது.

அனகாரிக்க தர்மபால இலங்கையில் பாடசாலைகளையும், மருத்துவ நிலையங்களையும் நிறுவியதுடன் இந்தியாவிலும் பௌத்த கோயில்களையும், விகாரைகளையும் நிறுவினார். இவற்றுள் முக்கியமானது, புத்தர் முதன் முதலாக உபதேசம் செய்ததாகக் கருதப்படும் சாரநாத் என்னும் இடத்தில் அவர் அமைத்த கோயில் ஆகும்.

சாரநாத்தில் 1933 ஆம் ஆண்டில் பிக்குவாக ஆன தர்மபால அங்கேயே, அதே ஆண்டில், தனது அறுபத்து ஒன்பதாவது வயதில் காலமானார்.

**ஆறுமுகநாவலரும் (1822-1879) சைவப்பாடசாலைகளும்:**

சிங்களவர் மத்தியில் காணப்பட்ட சமய மறுமலர்ச்சியைப் போன்று ஓர் இயக்கம் தமிழ் மக்கள் மத்தியிலும் எழுந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பிரசாரம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில், அமெரிக்க தேசத்தினின்று பாதிரிமார் வந்திறங்கினர். அவர்கள் தெருக்கள் தோறும் விரிவுரையாற்றியும், ஆங்காங்கு கிறிஸ்தவ ஆலயங்களை அமைத்தும், தமிழ்ப் பாடசாலைகள், மருந்துச் சாலைகள் என்பனவற்றை நிறுவியும் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பினர்.

அன்றியும் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்காகப் பெரிய கல்லூரியொன்றினை வட்டுக்கோட்டையில் அமைத்துத் தம் சமயத்தைத் தழுவிய மாணவர்க்கு இலவசமாகக் கல்வி பயிற்றியும் வந்தனர். அவர்கள் கிறிஸ்தவ குழுவினர்க்கென்று சிறப்பாகச் செய்த நன்மை, பின்னர் யாழ்ப்பாணத்தவரெல்லோருக்கும் பொதுவானதொரு மாபெரும் நலனாய் முடிந்தது.

கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு கிடைத்த நன்மைகளைக் கண்ணுற்ற சைவசமயத்தவர், கிறிஸ்து சமயத்தைத் தழுவத் தொடங்கினர். ஆங்கிலக் கல்வியே உணவைத் தரவல்லது என்னுங் கடைப்பிடியோடு அதனைக் கற்றலில் யாவருங் காலங்கழித்த வேளையில், சைவர்களின் இன்னல்களைத் தீர்க்க ஆறுமுக நாவலர் தோன்றினர். ஆறுமுக நாவலர் அவர்கள், தமிழ்க் கல்வியையே மிகப் போற்றிக் கற்று வந்தார். அதன் பயனாக தமிழில் மிகுந்த கல்வியாளானாய், இலக்கண இலக்கியங்களையும், சித்தாந்த நூல்களையும் நன்காராய்ந்து மிகுந்த புலமையுடையவரானர். அதனோடு நில்லாது வடமொழியும் பயின்று பின்னர் ஆங்கிலமும் கற்றுத் தேறினார்.

அவ்வமையம் தம் நாட்டவரின் பண்டைச் சமயமாகிய சைவமும் தமிழ்க் கல்வியும் சீர்குலைந்து நிலை குன்றுவதைக் கண்ட நாவலர், பழைமையைப் பேணிக் காக்க முன் வந்தார். இதன் பொருட்டு நாவலர் துண்டுக் கட்டுரைகளாலும், சிறு நூல்களாலும், சொற்பொழிவுகளாலும் பாதிரிமாரைக் கண்டித்தும் சைவர்களைத் தண்டித்தும் சைவப்பற்றையும் தமிழ்க்கல்வி வளர்ச்சியையும் மிக வோங்கச் செய்தார்.

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டையும் சௌந்தரியலகரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலன யந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

**சைவப் பாடசாலை நிறுவல்**

1870 இல் நாவலர் கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார். 1871-இல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணார்பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப் பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது. அவர் சமயங் காரணமாகத் தொடங்கிய பாடசாலைகள், பின்னர் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தன.

**இராமகிருஷ்ண சபை:**

இராம கிருஷ்ண சபை. இராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்ற பெரியாரின் பெயரால் அவர்களது தலை மாணவனான விவேகானந்த அடிகளால் நிறுவப்பட்டது. சிக்காகோவில் 1893 இல் நடைபெற்ற சைவசமய மகாநாட்டில் விவேகானந்த அடிகள் ஈட்டிய பெரும் புகழ், கீழ் நாடுகளில் ஒரு பெரும் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் அம் மகாநாட்டில் நின்று இந்தியா திரும்பும் பொழுது, முதன் முதல் கொழும்பை வந்தடைந்தார். சுவாமி விவேகானந்தர் இலங்கை வந்ததன் பேறாக, கொழும்பு விவேகானந்தா சபை 1902 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் இராம கிருஷ்ண சங்கத் துறவிகள் இலங்கையில் பிரசாரஞ் செய்ததன் பயனாக, கொழும்பில் இராமகிருஷ்ண சங்கக் கிளையொன்று நிறுவப்பட்டது. அச்சபை நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைகளைத் திறந்து கல்வி போதிப்பதில் ஆர்வமும் ஊக்கமும் கொண்டிருந்தது.

**சேர். பொன். இராமநாதன்:**

இராமநாதன் அவர்கள் கல்வித்துறையில் ஞானமுடையவராய் விளங்கினார். அவர் சைவ மகளிருக்காக மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரி எனப்படும் விடுதிப் பெண் பாடசாலையை 1913 இல் ஆரம்பித்து வைத்தார். பின்னர் சைவ மானவர்களுக்கென யாழ்ப்பாணத்திலே திருநெல்வேலியில் 1919 இல் பரமேஸ்வராக் கல்லூரியை அமைத்தார். இவற்றின் பயனாக சைவ மாணவர்களும் மாணவிகளும் சைவ சமயச் சூழலிலே கல்வி பயிலுவதற்கு வழி பிறந்தது.

**முஸ்லீம் பாடசாலைகள்**

பௌத்தரும் இந்துக்களும் முன்னேறிய காலத்தில் இலங்கை வாழ்மக்களின் ஒரு பகுதியினராகிய முஸ்லீம்களும் வாளாவிருக்கவில்லை. முஸ்லீம்களின் முன்னேற்றம் கல்வியெனும் பாதை வழியே செல்ல வேண்டுமென வழி வகுத்துக் காட்டியவர் சித்தி லெவ்வை ஆவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா...

பட்டுள்ளார்.

அண்மையில் கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் முன்பாகப் பொலிஸார் ஒருவரின் கடமைக்கு அர்ச்சுனா எம்.பி. இடையூறு விளைவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று அர்ச்சுனா எம்.பி. கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் வழங்கச் சென்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஆயுதங்கள்...

யில் கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் நிலத்தில் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை புதைத்து, மறைத்து வைத்துள்ளதை அகழ்ந்து எடுப்பதற்காக விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற உத்தரவு பெற்று மண் அகழ்வும் இயந்திரமான பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப் பணியை நேற்று முன்னெடுத்தனர்.

காலை 9 மணி தொடக்கம் பகல் ஒரு மணிவரை அகழ்வு மேற்கொண்ட போதும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதையடுத்து அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. (ம-7)

## பொய்களால்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 24 மணிநேரமும் இவ்வாறு பொய் பேசும் அரசு இலங்கையில் இதுவரை இருந்ததில்லை. பொய்கள் மட்டும்தான் அரசின் பிரதான கொள்கையாக மாறியுள்ளன.

அண்மைக்காலமாகப் போதைப் பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் அரசால் பல்வேறு பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் காரணமாக நாடும் சீரழிந்து வருகிறது. எனவே அவற்றைக் கண்டுபிடித்து அழிப்பது சிறந்த செயலாகும். அதேநேரம் துறைமுகத்தில் இருந்து அனுமதியில்லாமல் கொள்கலன்களை விடுவித்த விவகாரம் தொடர்பில் அரசு மௌனமாகவுள்ளது.

மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசுக்கு மக்கள் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. மாகாண சபைத் தேர்தலில் பொய், மோசடி, குழப்பம், ஏமாற்றுதல் ஆகியவற்றைத் தோற்கடிக்குமாறு மக்களிடம் கோருகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 'மெபெட்ரோன்'...

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் குறித்த போதைப்பொருள் மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, இதனை உறுதி செய்ய முடிந்ததாக தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வகையான போதைப்பொருள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 22ஆம் திகதி வெலிகமப் பகுதியில் விடுதியொன்றில் ரஷ்ய நாட்டவரின் வழிகாட்டுதலின் கீழ் இயங்கிவந்ததாகக் கூறப்படும் இரகசியப் போதைப்பொருள் உற்பத்தி நிலையமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போதே ஐஸ் எனச் சந்தேகிக்கப்பட்ட சுமார் 10 கிலோகிராம் நிறையுடைய குறித்த போதைப்பொருளுடன் 18 வயதுடைய மோல்டா நாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஷெல் வெடித்...

அனர்த்தம் நேர்ந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதில் தென்மராட்சி கெற்பேலியைச் சேர்ந்த 44 மற்றும் 24 வயதான இருவர் உடல்பாகங்கள் சிதைந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் [illegible]

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30,33,104,316)

## ஜப்பான்...

முதலீடு, பொருளாதாரம், அபிவிருத்தி உதவி மற்றும் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து இருநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் புரிந்துணர்வு, வர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மன்னார்...

அத்துடன் மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை முன்னெடுக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கான ஜனாதிபதி செயலாளரின் உத்தரவு மக்களின் விருப்பங்களை நேரடியாகப் பாதிப்பதாக அந்தப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு எதிராக பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டமையைக் கண்டிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## 5...

இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்களில் 19 வயதுடைய மூன்று மாணவர்களும் 17 வயதுடைய இரண்டு மாணவர்களும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## படு...

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையிலிருந்து பயணித்த வாகன விபத்தில் நால்வர் உயிரிழந்த நிலையில் குறித்த விபத்தில் படுகாயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில [illegible]

சிகிச்சைபெற்றுவந்த இளைஞனொருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளது.

புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா விஸ்னுயன் (வயது-21) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி குருநாகல் அநுராதபுரம் பிரதான வீதியின் தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடைத்தொழிற்சாலை வான் ஒன்றும், லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் குறித்த அசம்பாவிதம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127











































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்
## உயர்நிலைக் கல்லூரி
**AHARAM HIGH STANDARD COLLEGE**

காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

## புதிய கல்வி ஆண்டு 2026

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

# புதிய தரம்-06

தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

01.10.2025 (புதன்கிழமை)

மாலை 3:30 - 5:30 வரை

அனுமதி வழங்கப்படுகிறது

(5520)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Receptionist(Night Shift) | : 0766248529 |
| Paper Quilling Artisan | : 0767781004 |
| Kitchen Cook & Helper | :0766248529 |
| Accounts Clerk | : 0775143819 |
| Customer Care | :0763242881 |
| Clinic Office Assistant | : 0752341811 |
| விற்பனை உதவியாளர் | : 0766350560 |
| Juice maker | : 0760709751 |
| Branch Manager | : 0778873493 |
| Waiter | : 0776525861 |
| CCTV Technician | : 0741428161 |
| Account Assistant | : 0779687961 |
| சிகையலங்கரிப்பாளர்(ஆண்கள்) | : 0773565155 |
| Sales Assistant | : 0777921777 |
| Cashier | : 0740943967 |
| Video Editor | : 0212221729 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்பில் இணைய மற்றும் மேலதிக

யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :

**dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா?

**0777733368**

(5240)

**DEWMAS,** 51, Amman Road, Nallur



## வாகனம் வாடகைக்கு தேவை

03 மாதத்திற்கு கன்டர் வாகனம் தேவை.

நாளாந்தம் ஓடுவதற்கும் வாகனம் தேவை.

(5554)

**077 358 3879**



## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5527)

**076 663 3199**



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3987)

**076 825 7716** (ஆகாஸ்)



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆணகள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- இருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3986)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236

v2vacancies@gmail.com


## காற்...

மன்னாரில் காற்றாலை செயற்றிட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திலிருந்த மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிடும் வகையிலும் மன்னாரில் பொது முடக்கமும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நேற்று இடம்பெற்றன.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் மன்னார் நகரசபை பொது மைதானத்தில் ஆரம்பமாகிய பேரணி, மன்னார் பிரதான வீதியூடாக பஸார் பகுதிக்குச் சென்றுமாவட்ட செயலகத்துக்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான மக்களுடன் பல கோஷங்களை எழுப்பியவாறு மாபெரும் போராட்டம் இடம்பெற்றது.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைப் போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தோம் என்று மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் மதகுருமார்களும் அரசியல் வாதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.(ம-7,285)


யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

## 27-09-2025

முதல் தீபாவளி தினம் வரை

# இந்தியன் செலக்ஷனின்

# தீபாவளி MEGA SALE

பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், பென்ஸி சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், சேட், ரீ சேட், ஜீன்ஸ், பார்ட்டி புறொக், லெஹங்கா, ஸ்கேட், பிளவுஸ் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகளையும்

மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

காலம்: 27-09-2025 முதல் தீபாவளி தினம் வரை

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)

(1610)



# கண்ணீர் அஞ்சலி

எமது வாடிக்கையாளரும் நண்பருமாகிய **நிமலறாயு** அவர்களின் அன்பு மனைவி

அமரர்

## திருமதி நிமலறாயு சாருமதி



அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும் - சிறிநதியா நகைமாளிகை உரிமையாளர்களும் ஊழியர்களும்

(C-3985)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org